Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 18.1.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 18.1.2026 - ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாட்டின் 77ஆவது குடியரசு தினத்தையொட்டி, தலைநகர் டெல்லி உட்பட பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அஸ்ஸாம் மாநிலத்தில் 6 ஆயிரத்து 950 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, வேறு பல திட்டங்களை தொடங்கி வைத்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை மேற்கு வங்கத்தில் உள்ள ஹூக்ளி மாவட்டம் சிங்கூரில் 830 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து வேறுபலத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

புதுச்சேரி மற்றும் திருக்காஞ்சியில், தை அமாவாசையை முன்னிட்டு, ஏராளமான பக்தர்கள் தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து வழிபட்டனர்.

நாட்டின் 77ஆவது குடியரசு தினத்தையொட்டி, தலைநகர் டெல்லி உட்பட பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. வருகிற 26ஆம் தேதி நாட்டின் 77ஆவது குடியரசு தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில், அன்றைய தினம் டெல்லி கடமைப் பாதையில் நடைபெறும் நிகழ்ச்சியில், குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு பங்கேற்று பாதுகாப்புப் படையினரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கிறார். முப்படையின் அணிவகுப்பு மரியாதையைத் தொடர்ந்து பல்வேறு வகையான அலங்கார ஊர்திகளும், இடம் பெற உள்ளன. குடியரசுதின விழா கொண்டாட்டங்கள் நடைபெற உள்ள நிலையில், புதுடெல்லி கடமைப் பாதை உள்ளிட்ட இடங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளது. இப்பகுதிகளில் காலை 4 மணி முதல் பொதுமக்கள் போக்குவரத்து மற்றும் பார்வைக்கு மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குடியரசு தலைவர் மாளிகையின் முதலாவது வாயிலில் நேற்று முதல் பொதுமக்களின் பார்வைக்கு தடைவிதிக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தீவிர கண்காணிப்பு, பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது. இதேபோல், சென்னை, கொல்கத்தா, பெங்களூரு என அனைத்து மாநில நகரங்களிலும், மாநில தலைநகரங்களிலும், பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்பு வரும் 30ஆம் தேதி வரை அமலில் இருக்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அஸ்ஸாம் மாநிலம் நாகோன் மற்றும் கலியாபோர் என்ற இடத்தில் சுமார் 6 ஆயிரத்து 950 கோடி ரூபாய் மதிப்பில் காசிரங்கா உயர்மட்ட வழித்தட திட்டத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில், பிரதமர் இந்த மேம்பாலத்தின் மாதிரி வடிவத்தையும் பார்வையிட்டார். காசிரங்கா தேசிய பூங்கா 35 கிலோமீட்டர் உயர்மட்ட வனவிலங்கு தடத்தை கொண்டுள்ளது. பூங்காவின் வளமான பகுதி பல்லுயிர் பெருக்கத்தையும், பாதுகாப்பையும், உறுதி செய்வதாக அமைந்துள்ளது. அதே நேரத்தில், பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. காசிரங்கா பகுதியை உலக பாரம்பரிய இடமாக யுனெஸ்கோ அங்கீகரித்துள்ளது.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், சமீப காலமாக இப்பகுதியில், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில், நாட்டில் வனம் மற்றும் மரங்களின் பரப்பளவு அதிகரித்துள்ளது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். அஸ்ஸாமின் நாகோன் மாவட்டத்தில் உள்ள கலியாபோர் என்ற இடத்தில், இரண்டு புதிய வந்தே பாரத் ரயில்களையும் பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த புதிய ரயில் சேவைகள் வடகிழக்கு மற்றும் வட இந்தியா இடையேயான ரயில் இணைப்பை

வலுப்படுத்தும். இதனால் மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான பயணம் சாத்தியமாகும்.

*பிரதமர் அஸ்ஸாம் – 2 (19)*

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, காசிரங்கா வனப்பகுதிக்கு தாம் வருகைப் புரிந்ததை நினைவு கூர்ந்த பிரதமர், தற்போது இந்த பகுதிக்கு மீண்டும் வர வாய்ப்பு கிடைத்து இருப்பதாகவும் அவர் கூறினார். நாட்டு மக்களின் முதல் தீர்வாக பாஜக திகழ்வதாக குறிப்பிட்ட அவர், பொதுமக்களின் நம்பிக்கை காரணமாக கடந்த ஒன்றரை ஆண்டுகளில் பாஜக சீரான வளர்ச்சியை கண்டு வருவதாகக் கூறினார். அண்மையில் நடந்து முடிந்த பீகார் தேர்தலில் பாஜக கூட்டணிக்கு மக்கள் அங்கீகாரம் வழங்கி இருப்பதாகவும், சாதனை அளவாக அந்த மாநிலத்தில் பாஜகவுக்கு மக்கள் வாய்ப்பு வழங்கி இருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட, மகாராஷ்டிரா மாநிலத்தில் முக்கிய நகரத்தில் பாஜக வெற்றி பெற்றதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

*கைவினைப் பொருட்கள் கண்காட்சி (9)*

பிரதமரின் கைவினைக் கலைஞர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் பாரம்பரிய கைவினைப் பொருட்கள் கண்காட்சி புதுடெல்லியில் இன்று தொடங்கியது. கைவினைக் கலைஞர்களின் தனித்துவமிக்க தயாரிப்புகளை காட்சிப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் ஏதுவாக மத்திய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர அமைச்சகம் சார்பில் இந்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கண்காட்சி இன்று முதல் வரும் 31ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த கண்காட்சியை மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. ஜிதன்ராம் மஞ்சி தொடங்கி வைத்தார்.

*பிரதமர் மேற்கு வங்கம் -1 (18)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை மேற்கு வங்கத்தில் உள்ள ஹூக்ளி மாவட்டம் சிங்கூரில் 830 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து வேறுபலத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். பாலாகரில் உள்ள உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து முனையம் மற்றும் சாலை மேம்பாலம் உள்ளிட்ட விரிவாக்க துறைமுக வாயில் அமைப்புகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், மத்திய அரசின் அனைத்துத் திட்டங்களும், மேற்கு வங்க மாநிலத்தின் வளர்ச்சியை விரிவுபடுத்தும் என கூறினார். வளர்ந்த இந்தியா என்ற இலக்கை அடைய மத்திய அரசு செயல்பட்டு வருகின்றது என்றும் பிரதமர் தெரிவித்தார். சுமார் 900 ஏக்கர் பரப்பளவில், ஆண்டுக்கு சுமார் 2.7 மில்லியன் டன் திறன் கொண்ட நவீன சரக்கு கையாளும் முனையமாக பாலாகர் உருவாக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். கடந்த 11 ஆண்டுகளில், கொல்கத்தாவில் உள்ள ஷியாமா பிரசாத் முகர்ஜி துறைமுகத்தின் திறனை மத்திய அரசு மேம்படுத்தி வருவதாகவும், பிரதமர் தெரிவித்தார். இத்திட்டங்கள் அனைத்தும், வேலைவாய்ப்பை உருவாக்கி வருகிறது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

தொடர்ந்து ஜெய்ராம்பதி – பரோகோபிநாத்பூர் – மைனாப்பூர் இடையே புதிய ரயில் பாதையையும் பிரதமர் தொடங்கி வைத்தார். இந்த ரயில் பாதை தர்கேஷ்வர் – பிஷ்ணுபூர் புதிய ரயில்பாதை திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். புதிய ரயில் பாதையுடன் பரோகோபிநாத்பூரில் நிறுத்தத்துடன் மைனாப்பூர் மற்றும் ஜெய்ராம்பதி இடையே புதிய ரயில் சேவையையும் அவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இது யாத்ரீகர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஹவுரா – ஆனந்த் விஹார் முனையம், அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் ஆகிய 3 அமிர்தபாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களையும் பிரதமர் கொடியசைத்து தொடக்கி வைத்தார். சீல்டா – பனாராஸ் அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் சந்த்ராகாச்சி – தாம்பரம் எக்ஸ்பிரஸ் ஆகியவற்றையும் பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள் தினசரி பயணிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக உருவெடுத்து உள்ளது. தற்போது நாடு முழுவதும் 34 அம்ரித் பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு...

(வாய்ஸ்)

*பிரதமர் மேற்கு வங்கம் – 3 (13)*

(வாய்ஸ்)

அஸ்ஸாமில் இன்று 5 புதிய அம்ரித் பாரத் ரயில்கள் தொடங்கப்பட்டதன் மூலம் அத்தகைய ரயில்களின் எண்ணிக்கை 39ஆக உயரும். அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்கத்தில் இருந்து புறப்படும் இத்தகைய ரயில்கள், பீஹார், உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு மலிவு விலையில் நீண்ட தூர இணைப்பை வழங்கும் இந்தச் சேவைகள் ரயில் பயணத்திற்கான கூடுதல் சேவையை பூர்த்தி செய்யும். அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள் ஆயிரம் கிலோமீட்டருக்கு சுமார் 500 ரூபாய் என்ற மலிவு கட்டணத்தில் ஏசி இல்லாத நீண்ட தூர சிலீப்பர் வகுப்பு பயணத்தை வழங்குகிறது. குறிப்பாக, பண்டிகை காலங்களில் அதிக பயணிகளின் எண்ணிக்கையை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ரயில் நாட்டின் பல்வேறு பகுதிகளில், வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் குடும்பத் தேவைகளுக்காக பயணிக்கும் பயணிகளுக்கு மலிவு மற்றும் சிறந்த சேவையை வழங்குகிறது.

*புதுச்சேரி – தை அமாவாசை (16)*

புதுச்சேரியில், தை அமாவாசையை முன்னிட்டு, புதுச்சேரி கடற்கரை பகுதி, மற்றும் திருக்காஞ்சி ஆற்றில் ஏராளமான பக்தர்கள்

தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர். மேலும், கடற்கரைக்கு வந்த பல்வேறு கோவில் உற்சவர்களின் தீர்த்தவாரியும் நடைபெற்றது. இது மட்டுமல்லாமல், புதுச்சேரி நகரப்பகுதியில் உள்ள கோவில்களில் இருந்து உற்சவர் சிலைகள் கடற்கரைக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, தீர்த்தவாரியும் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதேபோல், இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் தை அமாவாசையை முன்னிட்டு, பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்று தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தனர். தொடர்ந்து, அக்னி தீர்த்தத்தில் நீராடி தங்களது முன்னோர்களுக்கு, தர்ப்பணம் செய்து வழிபட்டனர். பிறகு இராமநாதர் சுவாமி கோவிலில் உள்ள 22 புண்ணிய தீர்த்தங்களில் நீராடி இராமநாதர் சுவாமி மற்றும் பர்வதவதனி அம்பாள் ஆகியோரை நீண்ட வரிசையில் காத்திருந்து மக்கள் வழிபட்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் இராமேஸ்வரத்திற்கு வருகை தந்ததை முன்னிட்டு, ஏராளமான காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

*காரைக்கால் (14)*

காரைக்காலில், கலை பண்பாட்டுத் துறை மற்றும் வேளாண்துறை சார்பில், மலர் – காய்- கனி கண்காட்சி நேற்று தொடங்கியது. இது பற்றிய ஒரு செய்தித் தொகுப்பு...

(வாய்ஸ்)

(வாய்ஸ்)

காரைக்கால் புறவழிச் சாலையில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர். 320 வகையான 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு மலர் செடிகள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன. பல வகைச் செடிகள் கள்ளிச் செடிகள் போன்றவையும் இடம் பெற்றுள்ளன. இக்கண்காட்சியில், ஈஃபிள் டவரை ரசிக்கக் கூடிய வகை மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பெண்கள், குழந்தைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை இந்த கண்காட்சி இடம் பெற்றுள்ளது. இதில், மராத்தான், படகுப் போட்டி, நாய்கள் கண்காட்சி, கைவினைப் பொருட்கள் கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. இன்று மாலை இதன் நிறைவு விழா நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

*புதுச்சேரி ஜிப்மர் (10)*

புதுச்சேரி, ஜிப்மர் மருத்துவமனையில், வருகிற 20ஆம் தேதி 14ஆவது பட்டமளிப்பு விழா, நடைபெற உள்ளது. இவ்விழாவில்

மொத்தம் 941 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட உள்ளது. விழாவில், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சரும் – இரசாயனங்கள் மற்றும் உரத்துறை இணையமைச்சருமான திருமதி. அனுபிரியா படேல் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கி சிறப்புரை ஆற்ற உள்ளார். நிகழ்ச்சியில், புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், மாநிலங்களவை உறுப்பினர் திரு. எஸ். செல்வகணபதி, உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

*குடியரசு துணைத் தலைவர் (8)*

இந்தியா தன்னிறைவு பெற்ற ஒரு வளர்ந்த நாடாக உருவெடுக்க அடுத்த இரண்டு தசாப்தங்கள் மிகவும் முக்கியமானவை என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், இந்தியாவை ஒரு தன்னிறைவு பெற்ற வளர்ந்த நாடாக மாற்றுவதில் உத்தரகாண்ட் மாநிலம் சிறப்பு பங்கு வகிக்கும் என்று கூறினார். புதுப்பிக்கப்பட்ட எரிசக்தி, இயற்கை வேளாண்மை, ஆயுஷ், சுற்றுலா, உள்ளிட்ட துறைகளில் உத்தரகாண்ட் மாநிலத்தின் செயல்பாட்டை அவர் எடுத்துரைத்தார்.

*பியூஷ் கோயல் (13)*

இந்தியா – கனடா இடையே பொருளாதார உறவுகள் மேலும் வலுப்படும் என்றும் வர்த்தக பேச்சுவார்த்தை மேலும் வலுப்படும் என்றும் மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார். கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர் டேவிட் எபி உடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை மற்றும் ஆலோசனைக்குப் பின் திரு. பியூஷ் கோயல் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள செய்தியில், இந்த சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை வலுப்படுத்துவதுடன் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கான நீடித்த சந்திப்பாக அமையும் என தெரிவித்துள்ளார். அரிய வகை கனிமங்கள், உற்பத்தி, பசுமை எரிசக்தி, தொழில்நுட்பம், கல்வி, பாதுகாப்புத் துறைகளில், இந்தியா – கனடா இடையே முதலீட்டு ஒத்துழைப்பை ஏற்படுத்தும் வகையில். தமது சந்திப்பு இருந்த தாகவும் இதனை தாம் வலியுறுத்தி உள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாட்டின் 77ஆவது குடியரசு தினத்தையொட்டி, தலைநகர் டெல்லி உட்பட பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அஸ்ஸாம் மாநிலத்தில் 6 ஆயிரத்து 950 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, வேறு பல திட்டங்களை தொடங்கி வைத்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை மேற்கு வங்கத்தில் உள்ள ஹூக்ளி மாவட்டம் சிங்கூரில் 830 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து வேறுபலத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

புதுச்சேரி மற்றும் திருக்காஞ்சியில், தை அமாவாசையை முன்னிட்டு, ஏராளமான பக்தர்கள் தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து வழிபட்டனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM / MS / RK